# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,929—1918 ம் ௵ பங்குனி௴ 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்

கிராமச்சங்க சட்டத்துக்கமைய உண்டுபண்ணப்பட்ட பிரமாணங்கள்.

1889 ம் ஆண்டின் கிராமச்சங்க சட்டத்தின் 16 ம் பிரிவின் பிரகாரம் இத்துடன் அணைத்திருக்கும் முதலாம் இடாப்பிற் காட்டிய உள்ஊர்ப் பிரிவுகளிலிருக்கும் குடிசனங்களால் தெரிவுசெய்யப்பட்ட கிராமச்சங்கத்தவர்கள் இத்துடனணைத்திருக்கும் இரண்டாம் இடாப்பிற் காட்டிய பிரமாணங்களை மேற்கூறிய சட்டத்தின் 6 ம் பிரிவுக்கிணங்க உண்டு பண்ணி அவைகளை, வடமாகாணம் ஏசன்றுத்துரை மூலமாக உத்தம தேசாதிபதி அவர்கள் அதிகார மந்திரசபையாருடைய ஆலோசனையோடு அங்கீகரிப்பதற்கு அல்லது தள்ளிவிடுவதற்கு அனுப்பியிருப்பதால்:—

உத்தமனூர் தேசாதிபதியானவர் மேற்கூறிய சட்டத்தின் 7 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டும் அதிகார மந்திரசபையாருடைய ஆலோசனையோடும் இத்துடனணைத்திருக்கும் இரண்டாம் இடாப்பிலுள்ள பிரமாணங்களை அங்கீகரித்திருக்கின்றார். 7 ம் பிரிவிற் கூறியபடி அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்கள் இதன்கீழ் பிரசுரம் பண்ணப்பட்டிருக்கின்றனவென்றும் இத்தால் விளம்பரஞ்செய்யப்படுகின்றது.

உத்தமனுருடைய கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ஆண்டு மார்ச்௴ 7 ந் ௳.

இடாப்பு I.—1912 ம் ஆண்டு மாசி மாதம் 8 ந் திகதி இடப்பட்ட பிரசித்தத்திற் கூறிய உள்ஊர்ப்பிரிவு.

| இல. | | இல. | | இல. | | இல. | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நயினாதீவு | 10. | மானிப்பாய் | 19. | புத்தூர் | 28. | கட்டைவேலி |
| 2. | புங்குடுதீவு | 11. | வட்டுக்கோட்டை | 20. | நீர்வேலி | 29. | புலோலி |
| 3. | அனலைதீவு | 12. | ஙகானை | 21. | கோப்பாய் | 30. | குடத்தனை |
| 4. | காரைதீவு | 13. | பண்டத்தரிப்பு | 22. | நாவற்குளி | 31. | செம்பியன்பற்று |
| 5. | வேலணை | 14. | உடுவில் | 23. | சாவகச்சேரி | 32. | முள்ளிப்பற்று |
| 6. | அல்லைப்பிட்டி | 15. | மல்லாகம் | 24. | கச்சாய் | 33. | புலோப்பளை |
| 7. | சிவியாதெரு | 16. | தெல்லிப்பளை | 25. | மிருசுவில் | 34. | தம்பகாமம் |
| 8. | நல்லூர் | 17. | மயிலிட்டி | 26. | வரணி | 35. | முகமாலை |
| 9. | கொக்குவில் | 18. | அச்சுவேலி | 27. | உடுப்பிட்டி | | |

1899 ம் ஆண்டு மாசி௴ 10 ந் திகதியையும் 1905 ம் ஆண்டு புரட்டாதி௴ 1 ந் திகதியையும் கொண்ட பிரசித்தங்களிற் கூறிய உள்ஊர்ப் பிரிவு.

| | | | | |
|---|---|---|---|---|
| 36. துணுக்காய் | 37. கரைச்சி | 38. பூநகரி | 39. பல்லவராயன்கட்டு | 40. நெடுந்தீவு |

இடாப்பு II.—6 ம் பிரிவுக்கமைய உண்டுபண்ணிய பிரமாணங்கள்.
உட்பிரிவு (1).—ஊர்ப் பொதுவேலைகள்.

1. கிராம வேலைகள்.—1889 ம் ஆண்டின் 24 ம் இலக்கச் சட்டத்தின் 6 ம் பிரிவின் (1) ம் (2) ம் (4) ம் (13) ம் (16) ம் (17) ம் (21) ம் இலக்க உட்பிரிவுகளில் காட்டியிருக்கும் வேலைகள் இடங்கள் ஆதனங்கள் கட்டுதல் பழுதுபார்த்தல் பாதுகாத்தல் திருத்துதல் முதலிய வேலைகள் அந்தந்தப் பகுதியிலுள்ள குடிசனங்களால் தெரிவுசெய்யப்பட்ட கிராம சங்கத்தாரால் நடத்தப்படவேண்டியன.

அப்படியான வேலைகள் இடங்கள் ஆதனங்களினது இடாப்பு கிராமச்சங்கத்தார் எழுதி தங்கள் வேலை ஸ்தலத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது. பார்க்க விரும்பிய எவருக்கும் அந்த இடாப்புக் காட்டவேண்டும்.

2. கிராம ஆதனங்கள் தலைமைக்காரறன் பொறுப்பு.—முதற் பிரமாணத்தில் விதித்தபடி எழுதிய இடாப்புகளிற் சொல்லப்பட்ட கிராம ஆதனங்கள் அந்தந்த ஊர் தலைமைக்காரனுர் பொறுப்பிலுள்ளவையாகும். அப்படியான ஆதனங்களுக்கு காலத்துக்குக்காலம் பழுதுகள் திருத்தவேண்டியிருப்பின் ஒவ்வொரு தலைமைக்காரனும் அந்தந்தக் கிராமச்சங்கத் தலைவருக்கு அவற்றை அறிவிக்கவேண்டியது.

தலைமைக்காரனுவது வேறு யாராவது அப்படி அறிவித்தால் சங்கத்தலைவரானவர் அதைப்பற்றித் தமக்குத் தகுதியெனக் காணும் விசாரணைசெய்து பழுது திருத்தவேண்டியிருப்பின் அதற்கு செலவுமதிப்பு கணக்கு எழுதி கிராமச் சங்கத்தாருக்கு கொடுத்து அவர்களுடைய ஆலோசனையைப் பெறவேண்டும்.

3. வேலைகளின் வருஷாந்த செலவுமதிப்பு கணக்கு.—ஒவ்வொரு வருஷமும் மார்கழிமீ 31 ந் திகதிக்குமுன் கிராமச்சங்கத்தாரும் தலைவருமாக அடுத்த வருஷத்துக்கு புதிதாக செய்ய, பழுதுபார்க்க தாபரிக்க அல்லது திருத்த வேண்டிய ஊர்ப் பொதுவேலைகளையும் அவைக்கு வேண்டும் செலவுமதிப்பு கணக்கையும் எழுதிக்கொள்ள வேண்டும்.

பகுதி முழுதுக்கும் உபயோகமான வேலைகளைப் பிறம்பாகவும் பகுதியின் ஓர் பாகத்தவருக்கு உபயோகமான வேலைகளைப் பிறம்பாகவும் எழுதிக்கொள்ள வேண்டும்.

அந்த இடாப்புகள் சங்கத்தவர் விரும்பியபடி எப்பவும் திருத்திக்கொள்ளலாம்.

1889 ம் ஆண்டின் ஊர்ப்பொது சட்டத்தின் 6 ம் பகுதியின் 17 ம் உட்பிரிவின் பிரகாரம் அறவிடப்பட்ட பணத்தை (4) ம் (21) ம் பிரிவுகளிற் கூறப்பட்ட வேலைகளுக்கு உபயோகிக்கக் கூடாது.

4. உத்தரவளிக்கப்பட்ட வேலைகளைச் செய்துமுடித்தல்.—என்னவேலை என்னமாதிரி எந்தநேரம் செய்யவேணுமென்று சங்கத்தவர் தீர்மானஞ்செய்ய வேண்டும். சங்கத்தலைவரானவர் அவ்வேலை செய்வித்தலை மேற்பார்வைசெய்யும் விதத்தைப்பற்றித் தீர்மானித்தல் வேண்டும்; மேற்பார்வைக்கு தேள்வையான பேரை நியமித்து ஒப்பேற்ற அவருக்குத் தத்துவம் உண்டு.

5. கிராம ஆதனங்களை பாதுகாத்தல்.—1 ம் பிரமாணத்தில் வேண்டிய பிரகாரம் எழுதப்பட்ட இடாப்பில் காட்டியிருக்கும் ஆதனங்களை எவராயினும் மறிக்க தடுக்க தங்கள் காணிகளுடன் கூட்டிசேர்க்க அல்லது எவ்வித பழுதையேனும் செய்யக்கூடாது. இந்த விதிக்கு தவறின எவராயினும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டபின்பு, சங்கத்தலைவரானவர் குறித்த தவணைக்குள் அவரை செய்த பழுதை திருத்தும்படி அல்லது கூட்டிச் சேர்த்ததை விலக்கிவிடும்படி அல்லது தடையை எடுத்துவிடும்படி கட்டளைபண்ணலாம் அக்கட்டளையின்படி செய்யத்தவறினுல் சங்கத்தலைவர் தமக்கு உத்தமமெனத் தோற்றும்விதமாய் அந்த வேலையை தலைமைக்காரர் மூலமாகச் செய்வித்து செய்வித்ததனுல் வந்த செலவையும் மேற்பார்வைச் செலவையும் குற்றம்சாட்டப்பட்டவரிடமிருந்து அறவிடலாம்.

6. வேலிஅடைக்க முன்பாவிப்பதைப்பற்றிய கட்டுப்பாடு.—9 அடிக்கு குறைவான அகலமுள்ள கிராமப் பாதைகளுக்கு அருகிலிருக்கும் எல்லை வேலிகளுக்கு பாதைப்பக்கத்தில் முள் சேர்த்து கட்டக்கூடாது.

7. ஆடுமாடு பன்றிகளை கொல்லும் இடங்களைப்பற்றிய ஒழுங்கு.—ஒரு மிருகத்தை மற்ற மிருகங்கள் கான கொல்லவும் கூடாது. ஒன்றைக் கொன்றுல் அதன் பிணத்தை அப்புறப்படுத்தி அல்லது மறைத்துவைத்து இடம் சுத்திசெய்யமுன் வேறொரு மிருகத்தையுங் கொல்லப்படாது.

8. சுடுகாடு இடுகாடுகளைப்பற்றிய ஒழுங்கு.—கிராமச்சங்கத்தாரால் புறம்பாய் குறித்துவிடப்பட்ட இடங்களிலன்றி வேறெந்த இடத்திலாவது ஒரு பிணத்தை தாழ்க்க சுடக்கூடாது. நிலத்திலிருந்து 5 அடிக்குள் புதைக்கவும் படாது.

9. ஒவ்வொரு சாதியாருடைய பாவிப்புக்கு சுடுகாடு இடுகாடுகளை பகிர்ந்துகொடுத்தல்.—கிராமசங்கத்தலைவரானவர் அவசரமென்று கண்டால் ஒவ்வொரு சாதியாருக்கும் புறம்பாக பாவிக்க சுடுகாடு இடுகாடுகளில் இடங்கள் குறித்துவிடலாம். ஒரு சாதியாருடைய பாவிப்புக்காக குறித்துவிடப்பட்ட பாகத்தை வேறெந்த சாதியாராயினும் பாவிக்கக்கூடாது.

உட்பிரிவு (4).—வீண்தரவை மேய்ச்சல் தரவை நிலங்கள்.

10. வீண்தரவை நிலங்கள் பொதுமேய்ச்சல் தரவை நிலங்களைக் காத்தல்.—பொதுசன உபயோகத்துக்காக அல்லது மாடுமேய்ச்சலுக்காக விடப்பட்ட பொதுநிலங்களை எவராவது தமது நிலத்துடன் கூட்டி சேர்க்கவும் படாது நியாயவீனமான பழுதை செய்யவும் படாது.

உட்பிரிவு (5).—பயிர் விளைவித்தல்.

11. கிராமச்சங்கத்தார் பயிர்விளைவித்தல்.—கிராமச்சங்கத்தார் காய்கறிவகைகளை உண்டுபண்ண அல்லது வேறு பயிர்விளைவிக்க வேண்டுமாகில் பொதுநிலத்தை பாவிக்கவும் வேறுநிலத்தை குத்தகைக்கு எடுக்கவும் கிராமச்சங்கத்தாருக்கு தத்துவம் உண்டு.

உட்பிரிவு (6).—மாடுகள்.

12. நலம் எடாத நாம்பன்கள்.—மாட்டுப் பெருக்கத்திற்கென்று நலமெடாமல் வைத்திருக்கவேண்டிய நாம்பன்களை சங்கத்தலைவருக்கு காட்டுதல் வேண்டும்; அவர் சம்மதங்கொடுப்பாராகில் அவர் சம்மதப்பத்திரங் கொடுத்தல் வேண்டும்.

13. மாட்டுப்பெருக்கத்திற்கென்று விடப்படாத நாம்பன்களுக்கு நலம் எடுத்தல்.—12 ம் பிரமாணத்தில் விதித்தபடி சம்மதிச்சீட்டு கொடுபட்டிராத மற்றய 18 மாசத்திற்கு மேற்பட்ட எல்லா ஆண் மாடுகளுக்கும் சொந்தக்காரர் சங்கத்தலைவரால் குறிக்கப்பட்ட காலத்துக்குள் நலமெடுக்கவேண்டும்.

14. இதற்கென்று பிரசித்தம்பண்ணப்பட்ட கிராமங்களில் மாத்திரம் செலுத்தவேண்டிய பிரமாணங்கள்.—12 ம் 13 ம் பிரமாணங்களை கிராமச்சங்கத்தார் தங்கள் பகுதியில் எந்தெந்தப் பாகங்களில் செலுத்தலாமென்று கூடி தீர்மானஞ்செய்து பிரசித்தம் செய்வித்துக் கொண்டார்களோ அந்தந்தப் பாகங்களில் மாத்திரம் செலுத்தக்கூடியதாயிருக்கும்.

15. நலமடியாத நாம்பன்களை விலைக்குவாங்குதல்.—மாட்டுப் பெருக்கத்திற்கு ஒன்று அல்லது மேலதிகமான நாம்பன்களை விலைக்கு வாங்கவும் அதன் உபயோகத்தை வேண்டுபவர் எவ்வளவு தொகை கொடுத்துப் பெறவேணுமென்றதை தீர்மானம்பண்ணிக்கொள்ளவும் கிராமச்சங்கத்திற்குத் தத்துவம் உண்டு.

16. கட்டாக்காலி மாடுகள்.—மாடுகள் கட்டாக்காலியாய் பிரசித்த இடங்களில் திரிந்தால் அல்லது சொந்தக்காரருடைய தல்லாத வேறு செய்கைபண்ணிய அல்லது செய்கைபண்ணுத நிலத்துக்குள் போனுலும் அல்லது ஏதும் அழிவு பண்ணினுலும் அந்த மாடுகளை அந்த நிலச் சொந்தக்காரறன் அல்லது அதிற் குடியிருப்பவன் பிடித்தற்காக அந்தக் காணிக் குட்போக விடாமல் அவனை மறித்தாலேயன்றி கிராமச்சங்கத்தலைவருடைய தத்துவம் எழுத்தில் பெற்றுக்கொண்ட எவரும் பிடிக்கலாம்.

17. பிடிக்கிறதற்கு கூலி.—மேலிருக்கும் 16 ம் பிரமாணத்தில் விதித்தபடி பிடிக்கப்பட்ட ஒவ்வொரு மாட்டுக்கும் சொந்தக்காரறன் மாட்டைப் பிடித்தவனுக்கு ஒரு ரூபாவுக்கு மேற்படாமல் எவ்வளவு கிராமச்சங்கத்தார் கொடுக்கவேணு தீர்த்தபடி கூலி கட்டவேண்டும்.

18. கட்டாக்காலியாய்த் திரிந்து பிடிபட்ட மாடுகளுக்கு செய்யும்முறை.—மேலிருக்கும் 16 ம் பிரமாணத்தில் விதித்தபடி பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு 1876 ம் வருஷத்தின் 9 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 7 ம் 8 ம் பிரிவுகளின் காட்டியபடி செய்யவேண்டியது.

19. *வியாதிபிடித்த மாடுகளை புறம்புசெய்தல்.*—மாட்டு நோயுள்ள ஊரிலிருந்து இன்னொரு நோயில்லாத ஊருக்கு அல்லது ஊருக்கு ஊடாக மாடுகளைக் கொண்டுபோகப்படாது.

20. *மாடுகளுக்குள் தொற்றுவியாதி இருத்தலைப்பற்றி அறிவித்தல்.*—மாட்டுக்குள் கொள்ளைநோய் அல்லது தொற்றுவியாதி உண்டுபட்டால் அதின் சொந்தக்காறன் அல்லது மாட்டுப் பராபரிப்புக்காறன் அதைப்பற்றி ஊர்த்தலைமைக்காரனுக்கு 24 மணித்தியாலத்துக்குள் அறிவிக்கவேண்டும். தலைமைக்காரனுர் காட்டிய இடத்தில் அப்படி நோயுள்ளமாட்டை புறப்பாகக் கட்டிக்கொள்ள வேண்டும்.

21. *வியாதியுள்ள இடங்களில் மாடுகளைக்கட்டுதல்.*—மாட்டுவியாதி இருக்கிற அல்லது முப்திய 14 நாட்களுக்குளிருந்த ஒவ்வொரு கிராமத்திலும் எல்லா மாட்டுச் சொந்தக்காரரும் அல்லது மாடுபராபரிப்புக்காரரும் தங்கள் மாடுகளை வெளியே திரியவிடாமல் கட்டி அல்லது அடைத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

22. *செத்த மிருகங்களின் பிணத்தை எடுத்துப் புதைத்தல்.*—செத்த மாட்டின் சொந்தக்காறன் அல்லது பராபரிப்புக்காரன் எவனும் அததப்பிணத்தை, சாணியை, படுக்கையை, எரித்து அல்லது 6 அடிக்குக் குறையாமல் தாழ்த்து மற்ற வியாதி இல்லாத மாடுகளுக்குக்கிட்ட போகமுன்னதாக தன்னையும் அந்த இடத்தையும் சுத்தம்பண்ணவேண்டியது அவனுடைய கடமையாம்.

23. *வருத்தமாய்ச் செத்தமாடுகளின் தோல் உரிக்கிறதைத் தடுத்தல்.*—கொள்ளைநோயால் அல்லது தொற்றுவியாதியால் செத்த மாட்டின் தோலை இறைச்சியை, கொம்பை, அல்லது குளம்பை யாராவது உரித்து அல்லது வெட்டி எடுக்கப்படாது.

24. *வருத்தமாய் இருந்து சுகப்பட்ட மாடுகளை புறம்பாக்கல்.*—வருத்தமாயிருந்து சுகமான மாடுகளை சுகப்பட்டு 14 நாள் செல்லும் வரைக்கும் மற்ற வருத்தமில்லாத மாடுகளோடு கலக்க விடப்படாது.

### உட்பிரிவு (7).—காணிவேலிகள்.

25. *ஊரவர்களுக்கு உரிய நிலங்களின் எல்லைகள்.*—ஊரவர்களுக்கு உரியநிலங்களின் எல்லைகளுக்கு வேலி, கல்லு, வரம்பு, கிடங்கு அல்லது ஊர்வழக்கப்படி வேறெவ்விதமாகவேனும் போதிய அடையாளம் இட்டுக்கொள்ளவேண்டும். யாராவது அப்படிப்பட்ட எல்லையை நியாயமில்லாமல் மாற்ற அழிக்க அல்லது பழுதுபடுத்தக்கூடாது. எல்லை அடையாளங்களை இருந்தஇடம் விட்டு அகற்றவும் கூடாது.

26. *எல்லை வேலிகளை போடுதலும் அதைப் பாதுகாத்தலும்.*—எல்லை வேலிகள் இரண்டு பக்க நிலக்காரருடைய பொதுச் செலவில் போட்டு பழுது திருத்திவர வேண்டியது. அவர்களுக்குள் ஒத்து இணங்கி ஒரு ஆளின் செலவில் போடலாம். அப்படி ஒருவருடைய செலவில் போட்டுவந்தால் அவருக்கு வேலியின் கதியால் முதலிய பிரயோசனத்தை அனுபவிக்க உரித்துண்டு.

27. *வேலி அடைக்கிறதற்கு அயற்காணிக்குள் போக உரித்து.*—எல்லை வேலியைப் போடுதற்கு அல்லது பழுது பார்த்தற்கு அல்லது ஊர் வழக்கப்படி கிடுகு, ஓலை அல்லது வேறெவ்வித பொருளையுங்கொண்டு வேலியை மூடி அடைத்தற்கு ஒரு காணிச் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் அல்லது அவனுடைய வேலைக்காரர் தேவையான சாமான்களுடன் அயற்காணிக்குள் போவது முறைமையாகும்.

28. *சரியான காலத்தில் வேலியை பழுது திருத்தாமல் விடுதல்.*—ஒரு வேலியை வழக்கமாய் பழுது திருத்தி வருபவர்கள் வேண்டிய காலத்தில் அப்படிச் செய்யாமல் அசட்டை பண்ணினுல் அதனுல் வருத்தமடைபவர்கள் கிராமச் சங்கத்தலைவருக்கு சகாயம் வேண்டி மனுப்பண்ணலாம், தலைவர் சங்கத்தாருடன் போதிய விசாரணை பண்ணியபின்பு காரியத்துக்கு ஏற்றபடியான கட்டளைசெய்ய வேண்டும். அந்தத் தீர்வை இரு பகுதியாருக்கும் கட்டுப்பாடுடையதாயிருக்கும்.

29. *வயல்களுக்கு எல்லை வரம்புகளை கட்டி பாதுகாத்தல்.*—வயல்களுக்குள் எல்லையைக் குறிக்கும் கட்டுகள் வரம்புகள் அல்லது வேறெவவித எல்லை அடையாளங்களும் இருபக்கத்து நிலச் சொந்தக்காரருடைய வேலையால் அல்லது பொதுச் செலவில் கட்டிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

### உட்பிரிவு (8).—அசங்கியங்கள்.

30. *அசங்கிய நிவிர்த்தி.*—யாராவது பின்னுற் சொல்லப்படுகிற அசங்கியங்களை செய்து தன் அயலவனுக்கு அல்லது ஒரு குறித்த பேருக்கு அல்லது பொதுவாய்ச் சனங்களுக்கு தீமையை மோசத்தை அல்லது தொல்லையை வருவிக்கக் கூடாது அல்லது அவருடைய பொருளுக்கு ஆதனத்துக்கு நட்டத்தை வருவிக்கக் கூடாது.

(1) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியை அல்லது இடத்தை தடுக்கக்கூடியதாக கல்லு, மரம், அல்லது வேறு சாமான்களை இடுதல்.

(2) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியில் அல்லது இடத்தில் அல்லது ஓரமாக குதிரைகள் அல்லது மற்றும் மிருகங்கள் பயப்பிடக்கூடியதாக பாய், சீலை, அல்லது வேறு பொருள்களை வைத்தல்.

(3) பாரம் ஏற்ற அல்லது இரக்க வேயல்லாமல் சும்மா தெருவில் ,வண்டிலை நிறுத்தி வைத்தல். பாரம் ஏற்றுவதும் இரக்குவதும் நியாயமான நேரத்துள் முடிக்கவேண்டும்.

(4) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியில் அல்லது இடத்தில் சிறு பிள்ளைகளை விளையாட அல்லது காவலில்லாமல் திரிய அல்லது மலசலங்கழிக்க விடுதல்.

(5) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியில் அல்லது இடத்தில் மாட்டை அல்லது வேறு மிருகத்தை தொடுத்து அல்லது காவலின்றி திரிய விடுதல்.

(6) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியில் அல்லது இடத்தில் பிழையான பக்கத்தால் வண்டில் விலத்திச் செல்லுதல்.

(7) பொதுசனப் பாவிப்பிலுள்ள வழியில் அல்லது இடத்தில் ஒரு மிருகத்தை அல்லது வண்டிலைக் கவலையீனமாக அல்லது கடுமையான சவதிபண்ணி ஓட்டுதல்.

(8) பொதுசன பாவிப்பிலுள்ள வழியில், இடத்தில் குடிவகை விற்கும் இடத்தில் அல்லது அருகில் குடித்து வெறித்த தள்ளாடல் ஒழுங்கீனமாக நடத்தல்.

(9) குடிக்கிறதற்கு அல்லது சமையல் பாவிப்புக்கு பொதுச் சனங்கள் தண்ணீர் எடுக்கிற கிணறு அல்லது குளத்திலிருந்து முப்பது அடி தூரத்துக்குள் மலக்குழிகளை வைத்திருத்தல் மலசலங் கழித்தல்

(10) பொது சனங்கள் பாவிக்கும் கிணறு குளம் அல்லது கேணியில் தொற்று வியாதியாளர் யாரென்றாலும் குளித்தல் கழுவுதல் சீலை அலம்புதல்.

(11) கிணறு குளங் கேணி நீரூற்றுகளை அசுத்தி பண்ணல்.

(12) இரவு 9 மணிக்குப்பின் பொதுசன நித்திரையை நியாயமின்றிக் குளப்புதல்.

(13) யாதொரு கட்டிடத்திலேனும் இடத்திலேனும் மானக்கேடான அல்லது அசப்பியங் குறிக்கும் படத்தைச் சித்திரித்தல், அவமான முண்டுபண்ணக் கூடிய அல்லது கோபம் மூடக்கூடிய சொற்களை எழுதுதல் அசப்பியமான பாட்டுக்களைப் பாடுதல் படித்தல். பொதுசன மரியாதையை பங்கப்படுத்தக்கூடிய அல்லது ஒருவரை மானங்கெடுக்ககூடிய வேறெந்த வேலையையுஞ் செய்தல்.

(14) தனது சொந்தமான அல்லது தன் பொறுப்பிலுள்ள ஒரு மிருகம் செத்தபிணத்தை நியாயமான நேரத்துக்குள் நிலத்தில் புதைக்க அல்லது வேறு விதமாக நீக்கிவிடத் தவறுதல்.

(15) மனிதர் உண்பதற்கு குடிப்பதற்கு பாவிக்கப்படும் எந்தச்சாமானையாவது கூடாமல் பழுதுபட்ட அல்லது அப்பாவிப்புக்கு உதவாத எந்தப்பொருளையாவது அது பழுது அடைந்ததென்று அல்லது கூடாதென்று அறிந்தும் அல்லது நம்ப இடமிருந்தும் அப்பொருளை வைத்திருத்தல் விலைகருக் காண்பித்தல் அல்லது விற்க வைத்திருத்தல்.

(16) பிறருடைய மான உணர்வுக்கு விரோதமானவகையாக தன் நிலத்தில் மலசலங் கழித்தல் அல்லது வேறொருவருடைய நிலத்திலேனும் பொதுசன பாவிப்பிலுள்ள வழியில் இடத்திலேனும் மலசலங் கழித்தல்.

(17) பொதுசன வழி அல்லது இடத்தில் ஊத்தை, கஞ்சல், குப்பை, முற்செடி, அல்லது பாவிப்பில்லாத பழுதடைந்த சாமான்கள் முதலிய எந்தச் சாமான்களையும் போடுதல்.

(18) பொதுசன வழிக்குள் அல்லது இடத்துக்குள் பிறருடைவ நிலத்துக்குள் அல்லது இவைக்கூடாக அழுக்குள்ள நீரைப்போக்குதல்.

(19) ஒருவருடைய வளவிலிருந்து துர்நாற்றம் எழும்பி சுற்றுப் புறத்திலிருக்கிர காற்றை அசுத்தப்படுத்த விடுதல்.

(20) ஒருவருடைய வளவிலிருககும் மரம் அல்லது கொப்பு அயற்காணிககுள் அல்லது பொதுசனவழிக்கு அல்லது இடத்துக்கு மேலாக சரிந்து வளர்ந்து சீவமோசம் அல்லது பொருள் மோசத்து ஏதுவான வகையாக இருககவிடுதல் அல்லது அயலவனை அல்லது பொதுசனத்தை அந்தப் பொருளின் அல்லது ஒரு பாகத்தின் பாவிப்பை கெடுக்கும்படி இருக்கவிடுதல்.

(21) ஒருவருடைய சொந்த அல்லது பாவிப்பிலுள்ள வீட்டை அல்லது நிலத்தை பொதுசன ஆரோக்கியத்துக்கு இடையூறாக அசுத்தமாகவும் அல்லது ஊத்தை கஞ்சல் குப்பை பாவிப்பில்லாத பொருட்களை எறிந்தும் புல் பூண்டு செடிகள் மூடி வளரவிட்டுமிருத்தல்.

(22) பொதுசன ஆரோக்கியத்துக்கு இடையூறுவரத்தக்கதாக தண்ணீர் தங்கிநின்றிழியும் குண்டுகுழி பள்ளங்களை மூடாமல் அல்லது நீரைக் கழிக்காமல்விடுதல்.

(23) யாதொரு கட்டுவேலை பயிற்செய்கை வேலையாலேனும் அல்லது நிலப்பரப்பை உயர்த்துதல் தாள்த்துதலாலேனும் அல்லது நீர் செல் வழிவாய்க்காலை மதகுகளை மாற்றி அல்லது மறித்துவிடுதலாலேனும் ஒரு நிலத்திலிருந்து நீர் சாதாரணமாய் வழிந்துவருகின்ற நிலைபரத்தை சங்கத்தாருடைய உத்தரவுகேட்டுப் பெற்றுக்கொள்ளாமல் மாற்றுதல்.

(24) ஒருவருடைய நிலத்திலிருக்கும் கிணற்றை அசுத்தமாயும் சுகாதாரவீனமாயும் வைத்துக்கொள்ளல்.

(25) ஒருவருடைய நிலத்தில் நாகதாளி வளரவிடுதல்.

(26) ஒருவருடைய கடையையும் சுற்றியிருக்கும் நிலத்தையும் அசுத்தமாயிருக்கவைத்தல்.

(27) கிராமச்சங்கத்துக்குமுன்பு குடித்துவெறித்தும் ஒழுங்கீனமாகவும் மரியாதையீனமாகவும் நடத்தல் அல்லது சங்கத்தாருடைய காரிய ஒழுங்குகளுக் கிடையூறாக எவ்விதமாகவேனும் நடத்தல் அல்லது கிராமச்சங்கக் கோட்டு வீட்டெல்லைக்குள் காறித் துப்புதல்.

மேலிருக்கும் (9) ம், (18) ம், (19) ம், (20) ம், (21) ம், (22) ம், (23) ம், (24) ம், (25) ம் இலக்கங்கொண்ட கீழ்ப்பிரிவுகளில் காட்டிய அசங்கிதங்கள் நடந்திருக்கும் சமயத்தில் அதற்குப் பாத்திரவாளன்பேரில் பிராதுதொடுப்பதற்குமுன் சங்கத்தலைவரானவர் குறித்த அசங்கிதத்தை ஓர் குறிக்கப்பட்ட காலத்துக்குள் விலக்கவேண்டுமென்று எழுத்தில் ஓர் அறிவித்தல் அந்த அசங்கிதம் செய்தவருக்கு கொடுத்தல் வேண்டும். அறிவித்தலசொல்லிய காலத்துக்குள் அந்த அசங்கிதத்தை விலத்தாவிட்டால் மாத்திரமே அவருக்கெதிராக பிராது தொடுக்கலாம். பிராதுபண்ணிக் குற்றப்பட்டபின்பும் அசங்கிதத்தை அவர் விலக்கத் தவறினால் சங்கத்தலைவர் தமது எண்ணப்படி அசங்கிதத்தை நீக்குவித்து அதன்பேரில் சென்ற நியாயமான செலவு முழுதையும் குற்றப்பட்டவரிடமிருந்து அறவிட்டுக்கொள்ளலாம்.

31. துர்நாற்றமுள்ள தொழில்வேலை ஒழுங்கு.—கிராமசங்கத் தலைவரிடம் எழுத்தில் உத்தரவுபெற்றுக்கொள்ளாமல் யாவரேனும் எலும்புப் பசளைகளை, எலும்பு மாவை விற்கிறதற்கு அல்லது அழுகிய அல்லது துர்நாற்றங்கொண்ட வேறெந்தப் பதார்த்தத்தையேனும் விலைக்காகுதலேனும் சும்மாவேனும் போட்டு அல்லது குவித்துவைக்கவும் கூடாது அல்லது வைப்பிக்கவும் கூடாது. இன்னும் அப்படி உத்தரவின்றி ஏதொரு சுண்ணாம்புச்சூளை செங்கல்சூளை அல்லது தோல்காய்ச்சுதலை அந்தப்பகுதி எல்லைக்குள் எந்த இடத்திலாயினும் உண்டுபண்ணவும் கூடாது, பாவிக்கவும் கூடாது.

உட்பிரிவு (9).—தூஷித்தல் அல்லது நிந்தித்தல்.

32. தூஷணம் அல்லது நிந்தனை.—ஒருவருக்குத் தொல்லையை விளைவிக்கக்கூடிய அல்லது கோபமூட்டக்கூடிய அல்லது சமாதான விரோதத்தை உண்டுபண்ணக்கூடியவிதமாக யாவராயினும் தூஷணமான அல்லது நிந்தனையான வார்த்தை பேசக்கூடாது.

உட்பிரிவு (12).—சூதாட்டம், சேவற் சண்டை, வண்டில் பந்தய சவாரி.

33. சூதாடுதலையும் சேவற் சண்டையையும் தடுத்தல்.—யாராவது சேவற் சண்டையை அல்லது சட்டவிரோதமான சூதாட்டத்தை செய்யப்படாது. தங்கள் வீடு வளவுகளுக்குள்ளும் நடைபெறவிடப்படாது. சட்ட விரோதமான சூதாட்டம் என்பது 1889 ம் ஆண்டின் 17 ம் இலக்கச் சட்டத்தின் 3 ம் பிரிவின்இரண்டாங் கீழ்ப்பிரிவில் சொல்லியிருக்கும் பொருளை உடைத்தாம்.

34. வண்டில் சவாரிசெய்தலைத் தடுத்தல்.—பொதுசன பாவிப்பிலுள்ள எந்த வழியிலும் யாவரேனும் வண்டில் சவாரிபண்ணக்கூடாது.

உட்பிரிவு (17A), 17 (B), (17C).—பொது வேலை அல்லது வரிப்பணம்.

35. பொதுவேலை செய்கிறதற்கு கடமைப்பட்டவர்கள்.—பிரசித்த ரோட்டுகட்டளைச்சட்டத்தின்படி வேலைசெய்ய கடமைப்பட்ட 18 வயது துவக்கம் 55 வயது வரைக்குமுள்ள எல்லா ஆண் குடிசனங்களும் மேலிருக்கும் 3 ம் பிரமாணத்துக்கமைய சங்கத்தார் ஆலோசித்து தீர்மானித்துக்கொண்டபடி ஒரு வருஷத்தில் எத்தனை நாள் வேலைசெய்யவேண்டுமோ அதை ஒவ்வொருவரும் தாமாகவேனும் பதிலாளனுப்பியேனும் செய்துகொடுக்கவேண்டும். ஆனால் எவராவது ஒரு வருஷத்தில் பத்து நாள் வேலைக்குமேல் வேலைசெய்ய கடமைப்பாடுடையரல்லர்.

36. வரிப்பணம் அல்லது வேலைக்குப் பதிலாக பணமிறுத்தல்.—ஒவ்வொரு வருஷமும் பங்குனிமாதம் 31 ந் திகதிக்குமுன் அப்படிப்பட்ட வேலையை கிராமச்சங்கத்தாரால் குறிக்கப்படும் வீதத்தின்படி தலைமைக்காரனிடம் பணங் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம். அத்தலைமைக்காரனுர் தாம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு தொகைக்கும் பற்றுச்சீட்டு கொடுப்பார். பற்றிக்கொண்ட பணத்தை தலைமைக்காரன் கிராமச்சங்கத்தின் பணக் கணக்குக்கு கச்சேரியில் கட்ட வேண்டும்.

37. வரிப்பண இரட்டிப்பு.—மேற்சொல்லிய 36 ம் பிரமாணத்தின்படி பணமிறுக்கத் தவறிய ஒவ்வொருவரும் வருஷந்தோறும் சித்திரைமாதம் 30 ந் திகதிக்குமுன் கிராமச் சங்கத்தார் குறித்த வீதத்தை இரட்டித்திறுக்கலாம்.

38. கிராமவேலை செய்ய தவறினவர்களுடையும் தண்டனை.—வேலை செய்யவேண்டிய ஒவொருவரும் ஒற்றை அல்லது இரட்டை வரிப்பண மிறுககத் தவறினும் அல்லது கேட்ட நேரம் வேலைசெய்ய தவறினும் அல்லது வேலைக்குச்சென்று ஒவ்வொரு நாளும் முழுநாள் வேலைசெய்யத் தவறினும் தண்டனைக்குள்ளாவார்கள். சங்கத்தாருககுத் தத்துவம் உள்ளவரைக்கு தண்டனை பண்ணலாம்.

39. ஊர்த்தலைமைக்காறன் வேலைசெய்யக் கடமைப்பட்டவர்களின் பெயர் இடாப்பு எழுதிக்கொடுத்தல்.—மேற் சொல்லப்பட்ட 35 ம் பிரமாணத்தின் பிரகாரம் ஊர் பொதுவேலைகளைச் செய்யக் கடமைப்பட்டவர்களுடைய பெயர் இடாப்பை அந்தந்த ஊர் தலைமைக்காரனு ரெழுதி ஒவ்வொரு வருஷமும் கார்த்திகைமாதம் 30 ம் திகதி அல்லது அதற்கு முன் சங்கத்தலைவருக்கு அனுப்பவேண்டும். ஒரு தலைமைக்காரன் தன்னுடைய பகுதியில் வேலைசெய்யக் கடமைப்பட்ட எவருடைய பெயரை என்றாலும் வேணுமென்று எழுதாமல்விடப்படாது.

40. வேலைசெய்கிறதற்கு அழைப்பு.—மேலிருக்கும் 36 ம் 37 ம் பிரமாணங்களின்படி பணமிறுக்கத் தவறினவர் ஒவ்வொருவரும் கிராமசங்கத்தலைவர் (தமது எண்ணப்படி) தீர்மானித்துக்கொண்ட இடத்திலும் நேரத்திலும் ஊர்பொது வேலைகளுக்கு வேலைசெய்ய வேண்டும். அப்படிவேலைசெய்யவேண்டிய ஆளுக்கு வேலைசெய்ய வேண்டிய திகதிக்கு எட்டு நாளைக்கு முன்னே தலைமைக்காரனுர் குறிக்கப்பட்ட நேரத்தையும் இடத்தையும் அறிவிக்கவேண்டும்.

41. வேலைசெய்ய அல்லது பணமிறுக்கத் தவறினவர்களின் இடாப்பை எழுதுதல்.—வேலைசெய்ய அல்லது பணமிறுக்கத் தவறினவர்களின் பெயர் இடாப்பை கிராமச் சங்கத் தலைவர் கேட்டநேரம் தலைமைக்காரனுர் எழுதிக்கொடுக்க வேண்டும். கிராமச் சங்கத் தலைவரின் கட்டளைப்படி, தவறினவர்களுக்கு 38 ம் பிரமானத்தின்படி வழக்கு வைக்கிறது தலைமைக்காரனுடைய கடமையாம்.

உட்பிரிவு (18).—ஊர்ப்பொது வழிகளில் இடங்களில் வீண்பொழுதுபோக்கல்.

42. வீண்பொழுது கழித்துத் திரிதலைத் தடுத்தல்.—பயப்படுத்தக்கூடிய அல்லது தொல்லைப்படுத்தக்கூடிய மாதிரியாகவேனும் முறையில்லாத நோக்கமாக இரவு 9 மணிக்கு பின் எந்தப்பொது சனவழி அலலது இடத்திலும் எவராலது வீணுக உலாவி பொழுதுபோக்கவும் கூடாது பதுங்கி ஒளிக்கவும் கூடாது.

உட்பிரிவு (20).—பெண்களுக்கு மதுவிற்றல்.

43. பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் மது அல்லது வெறி நீர் விற்பதைத் தடுத்தல்.—மதுபானத் தீர்வைச்சட்டத்திற் சொல்லப்படுகிற எந்த வெறிப் பதார்த்தத்தையாவது பெண்பாலாருககு அல்லது 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுககு 1912 ம் ஆண்டு 8 ம் இலகக மதுபானதீர்வைச்சட்டத்தின்படி அல்லது பின்பு அதைத் திருத்துகிற யாதாயினுஞ் சட்டத்தின்படி லைசென்சு பெற்றிருக்கிறவர் எவரும் தானுய் விற்க அல்லது வேறு ஆளை விற்க விடப்படாது.

உட்பிரிவு (21).—குளங்களையும் பயிர்ச்செய்கையையும்பற்றிய பழைய வழக்கங்கள்.

44. பழைய வழக்கங்களை பாதுகாத்தல்.—ஊர்க்குளங்களை அல்லது கேணிகளை புதுப்பித்தல் பளுதிருத்துதல் அல்லது பாதுகாத்தலைப்பற்றிய அல்லது பயிர்ச்செய்கையைப்பற்றிய பழைய வழக்கங்களை மற்றவர்களுக்கு இடையூறு வரத்தக்கதாக யாவராயினும் மீறி நடக்கலாகாது.

உட்பிரிவு (22).—ஊர்க்காரியங்கள்.

45. சடுதிமோசம் விளையாதபடி கிணறுகளைச்சுற்றி அடைத்தல்.—கிணறு குண்டுதூரவுள்ள நிலத்திலிருப்பவன் அல்லது சொந்தக்காரன் அந்தக் கிணறு குண்டுதூரவைப்பாவித்தாலும் பாவியாவிட்டாலும் நிலமட்டத்திலிருந்து இரண்டு அடி உயரத்துக்கு தகுந்தபடி சுற்றி அடைப்பித்துக்கொள்ள வேண்டியது. சுற்றி அடைக்க வேண்டிய விதம் 1887 ம் ஆண்டு வைகாசி௴ 18 திகதியைக்கொண்டதும் அந்த ஆண்டு மாதம் 20 ம் திகதி கசற் பத்திரிடகயில் பிரசுரம்பண்ணப்பட்டிருப்பதுமாகிய பிரமாணங்களில் காட்டியிருக்கிறது. சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் கிணறு குண்டுதூரவையும் அதிலிருந்து தண்ணீர் இறைக்கும் கருவிகளையும் பாவிப்புக்கு பழுதுமோசம் இல்லாத வகையாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

46. குளங்களுக்கு அல்லது நீர் வாய்க்காலுக்கு பழுசெய்யாமல் தடுத்தல்.—ஒரு குளம் அல்லது நீர்வாய்க்காலுக்குள் அதன் பாவிப்பை குறைக்கக்கூடிய மாதிரியாக மண் கல்லு கஞ்சல்களை போடவும்படாது அதன் கரையில் குவிக்கவும்படாது.

47. ஊர்க்குளம் அல்லது வாய்க்காலிலிருந்து மணல் சேறு முதலியவைகளை அகற்றல்.—கிராமச்சங்கத் தலைவரிடம் எழுத்தில் உத்தரவுபெற்றுக்கொள்ளாமல் எந்த ஊர்க்குளம் அல்ல - நீர்வாய்க்காலிலிருந்தும் மண், மணல் சேறு முதலியவற்றை யாவரேனும் அகற்றக்கூடாது.

48. ஊர்க்குளங்கள் முதலியவற்றை இன்னபாவிப்புக் கென்று குறித்துவிடுதல்.—எதும் ஒரு ஊர்க்குளத்தை நீரூற்றை, கிணற்றை தண்ணீர் குடிக்கும் அல்லது குளிக்குமிடத்தை ஓர் குறித்த பாவிப்புக்கு அதாவது சீலை தோய்த்தல் மாடு ஆடு தண்ணீர் குடித்தல் மனிதர் மாடு குதிரை அல்லது வேறுமிருகங்களை குளிக்க வார்த்தல், வேறும் ஆரோக்கியத்தின் நிமித்தமாக குறிக்கப்பட்ட பாவிப்புக்கென்று கிராம சங்கத்தார் கூட்டி ஆலோசித்து நியமிக்கவும் பிரசித்தம்பண்ணுவிக்கவும் அதிகாரமுண்டு. அப்படி நியமித்தபடி யன்றி யாவரேனும் வேறெந்தப் பாவிப்பும் செய்தல் கூடாது.

49. நெல்லு வயல் புகையிலைத் தோட்டத்து வேலிகள்.—கிராமச்சங்கத்தலைவரிடம் எழுத்தில் உத்தரவு முந்திக் கேட்டுப் பெற்றுக்கொள்ளாமல் யாவராயினும் தமது அல்லது வேறு ஒருவருடைய நெல்வயல் அல்லது புகையிலைத் தோட்டத்து எல்லையில் அல்லது ஓரத்தில் பூவரசாலும் அல்லது ஊர்வழக்கத்துக்கு மாறுக விருக்கிற வேறெந்த மரஉயகதியால்களாலும் வேலியுண்டுபண்ணல் கூடாது.

50. புகையிலைத்தோட்டங்கள் அல்லது நெல்லுவயல்களுக்குக்கிட்ட இருக்கும் மரங்கள்.—ஊர்வழக்கத்தின்படி நடக்கூடிய தல்லாத வேறுமரங்களை நெல்லுவயல் அல்லது புகையிலைத்தோட்டத்தின் எல்லையிலிருந்து ஆறுஅடிக்குள் நடககூடாது.

51. கிராமப்பொது ஆதனங்களுக்கு மேலாக வளர்ந்திருக்கும் மரக்கொப்புகள்.—கிராமச்சங்கப் பொறுப்பிலிருக்கும் நிலத்துக்கு மேலே சரிந்து வளர்ந்துஇருக்கும் வான்பயிர்க்கொப்பை வெட்டுவதற்குமுன் சங்கத்தலைவருக்கு நியாயமான அறிவித்தல்செய்யாமலும் ஊர்த்தலைமைக்காறன் மதித்தபடி கொப்புகளின் விலையைக் கட்டாமலும் வெட்டல் அல்லது தறித்தல் கூடாது.

52. கிராமச்சங்க அறிவித்தல்கள்.—பொதுசன அறிவிப்புக்கென்று எந்த இடத்திலும் கிராமச்சங்கத்தாரால் எழுதி ஒட்டப்பட்ட அறிவித்தலை யாராயினும் அழிக்க அல்லது பழுதுபடுத்தக்கூடாது.

53. ஊர்தலைமைக்காரர் கிராமச் சங்கத்தார் சங்கத்து உத்தியோகஸ்தர் ஊரவர்களுடைய வளவுகளுக்குள் பிரவேசிக்கும் உரித்து.—சங்கத்தலைவர் சங்க அங்கத்தவர் சங்கஉத்தியோகஸ்தார் ஊர்த்தலைமைக் காரர் சமாதான உத்தியோகஸ்தரானவர்கள் கிராமச்சங்க சட்டத்திலும் அதற்கமையவுண்டு பண்ணிய பிரமாணங்களில் சுட்டியிருக்கும் காரணம் பற்றி எவருடைய வீடுவளவுக்குள்ளும் நன்நோக்கமாக மாத்திரமே பிரவேசித்தல் முறைமையாகும்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சந்தைகள் கட்டுகிற வென்னும், பள்ள நிலங்களுக்கு வாய்க்கால் வெட்டுகிற வென்னும், புதிய ரேட்டுகள் திறக்கிற வென்னும், வெளிநிலங்கள் விடுகிற வென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே அஃதாவது :—

பிரதமபடத்து இலககம் 16,655. குறிச்சி—வெலிகம்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொங்காவத்த அல்லது இக்காவத்த | கல்லால் கட்டினவும் ஓடுகால் வேந்தவும் கட்டிடமுள்ள வெளிநிலம் .. | சே. டி. வி. சமரநாயக .. | 0 | 0 | 0·28 |
| 2 | ஷை .. | தென்னமரங்களும் ஓட்டால் வேய்ந்த இரண்டு கட்டிடங்களும், ஓடுகு கட்டிடமும் ஒரு கிணறும் கொட்டிலுமுள்ளது | சே. எ. டி. வி. சமரநாயகவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 36·14 |
| 3 | ஷை .. | கல் சிவருள்ள ஓடுகால் வேய்ந்த சந்தையுள்ள வெளிநிலம் .. | ஷை .. | 0 | 0 | 22·62 |
| 4 | ககத்தகாவத்த .. | தென்னேயும் கமுகுமுள்ள தோட்டம் .. | எஸ். என். வொன்சேகா .. | 0 | 0 | 2·37 |
| 5 | ஷை .. | தென்னேயும் மாட்டுக் கொட்டிலுமுள்ள தோட்டம் | எல். எச். பெர்னுண்டோவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 5·64 |
| 6 | ஷை .. | தென்னே மரங்களுள்ள தோட்டம் .. | பி. என். பெர்னுன்டோ .. | 0 | 0 | 5·84 |
| 7 | ஷை .. | ஷை .. .. | எல். ஏ. பெர்னுன்டோ .. | 0 | 0 | 4·34 |
| 8 | ஷை .. | தென்னேயும் மற்று மரங்களும் ஓடுகு கட்டிடமுமுள்ள தோட்டம் | இ. சி. பெர்னுண்டோவும் மற்றவர்களும் .. | 0 | 0 | 11·56 |
| 9 | மில்லகாவத்த .. | தென்னேயும் மற்று மரங்களும் ஓட்டு கட்டிடமுமுள்ள தோட்டம் .. | இ. சி. பெர்னுன்டோ .. | 0 | 0 | 2·22 |
| 10 | ஷை .. | தென்னேமரங்களும் கல்லால் கட்டி ஓடுகால் வேய்ந்த கட்டிடமுமுள்ள தோட்டம் .. | டொக்டர் இ. எவ். ஏதிரிசிங்க .. | 0 | 0 | 3·57 |
| 11 | ஷை .. | தென்னேமரங்களுள்ள தோட்டம் .. | சே. பி. தன்னசிங்க .. | 0 | 2 | 19·76 |
| 12 | ஷை .. | தென்னேயும் மற்று மரங்களுமுள்ள் தோட்டம் .. .. | எஸ். சே. டி. வொன்சேகா | 0 | 1 | 35·77 |
| 13 | ஷை .. | தென்னேமரங்களுள்ள தோட்டம் .. | எல். ஏச். பெர்னுன்டோ .. | 0 | 0 | 0·14 |
| 14 | டம்புகாவத்த .. | தென்னேயும் மற்று மரங்களும், ஓட்டால் வேய்ந்த கட்டிடமும், மூன்று ஓடுகு கட்டிடங்களும், ஒரு கிணறும் ஒரு கொட்டிலும் ஒருஓடுகு கொட்டிலின் பகுதியுமுள்ள தோட்டம் | சி. எம். ரேவெலும் மற்றவர்களும் .. | 1 | 0 | 0·21 |
| 15 | ஷை .. | தென்னேமரங்களும், ஓட்டு வீட்டின் பகுதியும் விருந்தையுமுள்ள தோட்டம் .. | முடிக்குரியது .. | 0 | 0 | 1·87 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிசுப்புக்கொள்ள அரசசட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம்பிரிவின் படி வேண்டிய பிரகாகம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சக ரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ ஏப்பிறில் மாதம் 19 ௳ தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ௵ மார்ச்சுமீ 11 ௳.

ஜே. ஜீ. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளிக்கூடக் கட்டிடம் போடுகிற என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 16,659. குறிச்சி—டெல்தற.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தலகனத்த .. | வெட்டப்பட்ட காடு, டெல்தற .. | ஏ. சி. குனவாதினு .. | 0 | 0 | 36·4 |
| 2 | ஷை .. | காடு ஷை .. | அந்திறடிகே பஸ்தியான் சில்வா .. | 0 | 0 | 21·4 |
| 3 | ஷை .. | காடு ஷை .. | அந்திறடிகே மனுவெல் சில்வாவும் மற்றவர்களும் .. .. | 0 | 0 | 20·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் ஏண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ ஏப்பிறில் மாசம் 18 ௳ தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ௵ மார்ச்சுமீ 2 ௳.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்லுக்குளி என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,828. குறிச்சி—மத்துறட்ட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கைபொறெஸ்ற் தோட்டம் | தேயிலையும் கல்லும் | கைபொறெஸ்ற் தேயிலைத் தோட்டக் கொம்பனி | 0 | 0 | 7·7 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 4·4 |
| 3 | ஷை .. | புல்லு .. | ஷை .. | 0 | 0 | 5·0 |
| 4 | ஷை .. | தேயிலை .. | ஷை .. | 0 | 0 | 5·0 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·8 |
| 6 | ஷை .. | தேயிலையுங் கல்லும் | ஷை .. | 0 | 0 | 9·3 |
| 7 | ஷை .. | ரோட்டு .. | ஷை .. | 0 | 0 | 3·9 |
| 8 | ஷை .. | கம்மரம் .. | ஷை .. | 0 | 0 | 17·3 |
| 9 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 22·8 |
| 10 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 2·8 |
| 11 | ஷை .. | வழிப்பாதை .. | ஷை .. | 0 | 0 | 2·3 |
| 12 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 5·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ ஏப்பிரல்மாதம் 20 ந் தேதியிலன்று 10 மணிக்கு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியக் கச்சேரி,
1918 ம் ஞூ மார்ச்சுமீ 7 ந் வ.

எம். எம். வெடர்பேர்ன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்ச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சுயபாஷைப் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,832. குறிச்சி—திஸ்பனே. விவரம்—தோட்டம்.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | இவல்கொட கெதறவத்த, அல்லது கமில்லகெதறவத்த .. | பி. எம். முதலிகாமியும் என். புஞ்சிறாளவும் | 0 | 0 | 33·34 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச்சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ ஏப்பிரல் மாதம் 20 ந் தேதியிலன்று 10 மணிக்கு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரெலியக் கச்சேரி,
1918 ம் ஞூ மார்சுமீ 7 ந் வ.

எம். எம். வெடர்பேர்ன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 6,788, களுத்துறை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஞூ (மார்ச்) பங்குனிமீ 15 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. கம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. கம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

மேல்மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்தும்கோறளை மேற்கில் வலல்லாவிற்றி பத்தில் கம்மன என்னும் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 87.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 1H2 | .. | நெடுங்காவெலகங்கலங்ககட்டிய .. .. .. | 0 3 20 |

எல்லைகளாவன : வடக்கு-ஓர் நீரோட்டம் ; கிழக்கு-நெடுன்காவெல பகாலகட்டிய (328,525 ம் உ. ப. ல் காணும் காணி) ; தெற்கும் மேற்கும்-பென்தொட்டகங்க (தென்மாகாண எல்லை).

II.—பிரதமபடம் 87.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 59 | .. | கிக்காதூவ .. .. .. .. .. | 0 3 0 |

எல்லைகளாவன : வடக்கு-கிக்காதூவ, 189,231 ம் உ. ப. ல் காணும் காணி ; கிழக்கும், தெற்கும், மேற்கும்-தென்னக்கே ஜேம்ஸ் உரித்தாடும் நெடுன்காவெல.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 426 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[களுத்துறை வி. உ. 5—1918.]

---

[அறிவித்தல் இல. 6,789, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஹு (மார்ச்) பங்குனிமீ 15 ந் தேதி துவககம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் என். ஏ. காம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. காம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் தம்பதேனி கற்பத்தைச்சேர்ந்த உடுகாகோறளை மேற்கில் றிவிகல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதிகளில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்கள் :—

I.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 9 | .. | றுகவெலகாவகேன .. .. .. .. | 4 1 0 |
| 9C | .. | கலகந்த .. .. .. .. | 2 1 28 |
| | | | 6 2 28 |

எல்லைகளாவன : வடக்கு-முடியால் விற்கப்பட்ட கெற்றகந்தகாவவத்த (324,801 ம் உ. ப. ல் காணும் காணி) முடிக்குரிய கெட்டுகந்த ; கிழக்கு-முடிக்குரிய டிவுல்காபிற்றியவத்த, முடியால் விற்கப்பட்ட றுக்கவெலகாவகெனவும் டிவுல்காபிற்றியகேனவும் (326,648 ம் உ. ப. ல் காணும் காணி) கறுணுதிபதி முதியான்செலாக்கெ அவுசதகாமி ஆராச்சி உரித்தாடும் எலகாவவத்தவும் டிவுல்காபிற்றியவத்தவும் ; தெற்கு-கறுணுதிபதி முதியான்செலாக்கே அவுசதகாமி ஆராச்சி உரித்தாடும் எகாவவத்தவும் டிவுலகாபிற்றிவத்தவும், எஸ். எ. குனரத்தினவும் மறுபேரும் உரித்தாடும் மகுல்லகாமுலகும்புற, கல்பலின்னஎல : மேற்கு-கல்பலின்னஎல, முடிக்குரிய கல்கந்தகாவவத்த முடிக்குரிய கல்கந்தகாஎகேன.

II.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 20T | .. | கிரியவெதுாகேகேன .. .. .. .. | 1 2 9 |

எல்லைகளாவன : வடக்கு-முடியால் விற்கப்பட்ட இன்னவத்த அல்லது மெனரிவத்தேகேன (326,682 ம் உ. ப. ல் காணும் காணி), எஸ். எ. ஆண்டிறுளையும் இன்னொருவரும் உரித்தாடும் றுக்கவெலகாவவத்த ; கிழக்கு-எஸ். ஏ. ஆண்டிறுளையும் இன்னொருவரும் உரித்தாடும் றுக்கவெலகாவவத்த ; தெற்கு-ஓர் ரேுட்டு ; மேற்கு-முடியால் விற்கப்பட்ட கோன்காமுலவத்த.

III.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 21K | .. | புலுகாமுலகேன .. .. .. .. | 2 0 24 |

எல்லைகளாவன : வடக்கு-முடிக்குரிய புலுகாமுலகேன ; கிழக்கு-முடியால் விற்க்கப்பட்ட புலுகாமுலகேனவத்த ; தெற்கு-முடிக்குரிய அகுனவெலகேன ; மேற்கு-முடிக்குரிய கட்டுபிலகொல்லெகேன, முடிக்குரிய பறந்தரமுக்கலான.

IV.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 21S | .. | கந்தபொடசெனவத்த .. .. .. .. | 5 2 9 |
| 32 | .. | கத்தபொடகும்புறெபில்லாவ .. .. .. .. | 1 1 25 |
| 32A | .. | இகலவெலெபில்லாவ .. .. .. .. | 1 0 8 |
| | | | 8 0 2 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 427—429 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய பட்டகொல்லகந்த; கிழக்கு-கிராமத்தாருக்குரிய பட்டகொல்லகந்த, 226,004 ம் உ. ப. ல் காணும் காணி, கிராமத்தாருக்குரிய பட்டகொல்லகந்த, முடிக்குரிய பட்டகொல்லகந்த, முடிக்குரிய கொன்ன காமுலகேன; தெற்கு-உவிஜசிங்க கெறத் முதியான்செலாக்கெ கப்புறுகாமியும் மறுபேரும் உரித்தாடும் கயுகாமுலவத்த, எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற, ஓர் எல; மேற்கு-எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற, முடியால் விற்கப்பட்ட கொலனகாகேன.

V.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 21AE .. | பொகாமுலகேன .. .. .. .. | 2 2 0 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய கொலன்காமுலகெனவத்தவும் படலகொட்டாப்புசெனவத்தவும், டபிள்யு. எச். எம். புஞ்சிமெனிக்காவும் மறுபேரும் உரித்தாடும் போகாமுலவத்த; கிழக்கு-முடிக்குரிய மதம்பலகாமுலவத்தவும் கொலன்காமுலவத்தவும்; தெற்கு-முடிக்குரிய மினிமறுகொடல்ல; மேற்கு-முடிக்குரிய மினிமறுகொடல்ல முடியால் விற்கப்பட்ட கிறும்பலய ஓவிற்றெகேன, (327,140 ம் உ. ப. ல் காணும் காணி).

VI.—பிரதம படம் 558.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 31 .. | இகலவெலபில்லாவ .. .. .. .. | 0 2 4 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட கொலன்காகேன, எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற; கிழக்கும் தெற்கும்-எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற; மேற்கு-முடியால் விற்கப்பட்ட புஹுகாமுலகெனவத்த, முடியால் விற்கப்பட்ட பன்வெவெபில்லாவ, ஓர் எல.

VII.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 34 .. | கோன்காமுலவத்த அல்லது வாடியவத்தயேன .. .. .. | 1 0 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய கோன்னகாமுலயேன; கிழக்கு-மல்ல அப்புகாமிலாக்கே பொடிகாமியும் இன்னொருவரும் உரித்தாடும் கதுறுகாமுலவத்த, அபயசிங்க முதியான்செலாககே றன்மெனிக்கா உரித்தாடும் கோன்காமுலவதத; தெற்கு-ஓர் எல; மேற்கு-எ. எம். றன்மெனிககா உரித்தாடும் கொன்காமுலவாடியவத்த, விஜசிங்க கெறத்முதியான் செலாக்கே கப்புறுகாமியும் மறுபேரும் உரித்தாடும் கயுகாமுலவத்த.

VIII.—பிரதமபடம் 558.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 39I .. | கமத்தகாவயேனவத்த .. .. .. .. | 1 3 20 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட கமத்தகாவயேன (328,131 ம் உ. ப. ல் காணும் காணி) கறுணதிபதி முதியான்செலாக்கே உக்குபண்டாவும் மறுபேரும் உரித்தாடும் கமத்தகாவவத்த, எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற; கிழக்கு-எஸ். எ. முதலிகாமியும் மறுபேரும் உரித்தாடும் தவட்டகாகும்புற; தெற்கு-கே. எம். உக்குபண்டாவும் மறுபேரு முரித்தாடும் கமத்த, எஸ். ஏ. முதலிகாமியும் மறுபேரு முரித்தாடும் தவட்டகாகும்புற, முடிக்குரிய அஸ்வெதுமபில்லாவயேன; மேற்கு-கறுணதிபதி முதியான்செலாக்கே உக்கு பண்டா விதானை உரித்தாடும் அஸ்வெதுமபெம்ம.

IX.—பிரதமபட 558.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 54 .. | ஆசாரிவத்தயேன .. .. .. .. | 2 1 1 |

எல்லைகளாவன்: வடக்கு-முடிக்குரிய தெல்காமுலவத்தவும் கெவனவத்தவும், கிராமத்தாருக்குரிய வல்பல்கலேமுக்கலானயேனை; கிழக்கு-முடிக்குரிய வல்பொல்கலமுக்கலான; தெற்கு-முடிக்குரிய றுக்கவெலகாவயேன; மேற்கு-கே. எம். புஞ்சி மெனிக்காவும் மறுபேரும் உரித்தாடும் கலகாபிற்றியேவத்த முடியால் விற்கப்பட்ட மகாகும்புறபில்லாவ, (327,131 ம் உ. ப. ல் காணும் காணி) பிற்றஎல.

[குருநாக்கல் வி. உ. 21—1918.]

---

[அறிவித்தல் இல. 6,790, மாத்தளை.]

உரிமை பெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரங்கள்.

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (மார்ச்) பங்குனி௴ 15 ௳ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் எனக்குக் கிடைத்திருக்கும் அதிகாரப்படி எனது கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய காணியெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஈ. றீ. மிலிங்றன்,
உதவி கவுண்மேந்து ஏசன்ற்.

சுட்டிய காணியின் விவரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக்கு மாத்தளை கிளக்குப்பகுதி லக்களை உடசியபத்து மெதஎல என்னும் கிராமத்தில் கலபல்லே ஹேனையும் கலபலஏன என்னும் காணிகளை (ஊத்துக்கு வளிநீங்கலாக) 1 றூட் 31 பாற்சேசு மட்டும் விசாலமுள்ள 1,548, 1,549 ம் துண்டில் பிரதமபடம் 6,411 மித்துடனைத்திருக்கும் படத்தின் மேற்கு வடக்கு டி. பி. 308,144; கிளக்கு-கலபலகும்புற, பில்லாவை, றத்னயக்க தடங்கல்பண்ணியது; தெற்கு-முடிக்குரிய அங்குரிமடித்தவும் அங்குரமடித்த ஹேனையும்; மேற்கு-உடஎன டிங்கிரிபண்டா தடங்கல்பண்ணியது.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 430 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

### அரசாட்சியார் எடுத்துக்கொள்ளப்படும் உரிமைப்பேசப்படாத காணி.

---

கீழ்மாகாணம் திரிகோணாமலை டிஸ்திறிக் தம்பலகாமம்பற்று சேனான்வாடிக் கிராமத்தில் இருக்கப்பெற்றதும் 3 ஏக்கர் 1 றூட் 2 பேட்சு விசாலமுடையதும் கீழே கண்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணித்துண்டானது கடந்துபோன எட்டு வருடக் காலங்களுக்கு மேற்பட சொந்தக்காரரால் உருத்துப்பாராட்டப்படாது விடப்பட்டிருக்குதென்று எனக்குத் தெரியவந்தபடியாலும், கூடியளவு ஊக்கத்தோடும் புத்தியோடும் என்னால் செய்யப்பட்ட விசாரணைகளில் அக்காணியின் சொந்தக்காரரை அல்லது நியாயப்பிரமாணத்துக்கமைய உரித்துப்பேசுகிற எவரையாவது அறிந்துகொள்ள இயலாமல் இருக்கிறபடியாலும்,

சகலரும் அறியும்பொருட்டு கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றர் றிச்சாட் ஆதர் கிறின்டோல் வெல்ஸ்ரிங் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் பெலப்பைக்கொண்டும் உத்தம தேசாதிபதி யவர்களின் அநுமதியைக்கொண்டும் இத்தால் வெளியரங்கப்படுத்துவதாவது :—1919 ம் ஆண்டு ஏப்றல் (சித்திரை)மாதம் 19 ந் திகதியிலன்று அல்லது அதற்குமுன்னதாக உரித்து ஸ்தாபிக்கக்கூடியவரால் அல்லது அவரின் முகாமைக்காரரால் என்முன்பாக அக்காணிக்கு உரித்துப்பேசப்படாதிருந்தால் மேற்குறித்த சட்டத்தின் 2 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியார் அதைத் திரும்பவும் எடுத்துக்கொள்வாரென்று 1918 ம் ஆண்டு பெப்பிரவரி (மாசி)மாதம் 9 ந் திகதியிலன்று மட்டக்களப்புக் கச்சேரியிலிருந்து என் கைச்சாத்திடப்பட்டது.

ஆர். ஏ. ஜீ. வெல்ஸ்றிங்,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றர்.

மேற்குறிக்கப்பட்ட அட்டவணை.

திரிகோணாமலை தம்பலகாமம்பற்று சேனான்வாடியிலிருப்பதும் 711 ம் இலக்க பிரதம படத்தில் 8821 ம் இலக்கக் கண்டமாக விபரிக்கப்பட்டதும். 103.574 ம் இலக்க அறுதியுறுதிப்படத்தை உடையதுமான ஒரு துண்டுக் காணி: எல்லைகள்: மேற்கு-முடிக்குரியதென்று சொல்லப்படும் பூமியும் தோணாவும் மற்றும் எல்லாப் பக்கங்களும் தோணா, விசாலம் 3 ஏக்கர் 1 றூட் 2 பேர்ச்சு. இப்பூமி 1876 ம் ஆண்டு காதர்மெய்தீன் சின்னத்தம்பிக்கு அறுதி விற்கபட்டது.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.